# 2024 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

**செலவுத் தலைப்பு இலக்கம் : 233**


இல. 31, இசுரு மாவத்தை,
பெலவத்த, பத்தரமுல்ல
ஐஐஐ.யயெடலளவ.பழஎ.டம
பழஎயயெடலளவளூளடவநெவ.டம

பீ.எஸ்.கே.ராஜபக்ஷ
**அரசாங்க பகுப்பாய்வாளர்**

# உள்ளடக்கம்

**அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தகவல்கள்**

1.1 அறிமுகம்
1.2 திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்
1.3 பிரதான பணிகள்
1.4 திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு
1.5 நிறுவனத்தின் பிரதான பிரிவுகள்
1.6 வெளிநாட்டு நிதியைக் கொண்ட கருத்திட்டங்களின் விபரம்

**அத்தியாயம் 02 – திணைக்களத்தின் செயலாற்றுகை**

**அத்தியாயம் 03 – 2024.12.31 ஆம் திகதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று
3.2 நிதி நிலைமைக் கூற்று
3.3 காசோட்டக் கூற்று
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
3.5 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை
3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை
3.7 நி.பி. 208 இற்கமைய ஏற்பாடுகளை சாட்டுதல் செய்தல்
3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவது பற்றிய முன்னேற்றம்

**அத்தியாயம் 04 – செயலாற்றுகை இலக்குகள்**

**அத்தியாயம் 05 – வினைத்திறன்மிக்க அபிவிருத்தி இலக்குகள்**

**அத்தியாயம் 06 – மனிதவள முகாமைத்துவம்**

6.1 பதவியணி முகாமைத்துவம்
6.2 பதவியணி குறைபாடு மற்றும் மிகை
6.3 மனிதவள முகாமைத்துவம்

**அத்தியாயம் 07 – இயைபு அறிக்கை**

## அத்தியாயம் 01

### நிறுவனத்தின் தகவல்கள்

### 1.1 அறிமுகம்

1904 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் இலங்கை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்ததாக ஒரு அலுவலருடன் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க பகுப்பாய்வாள் நிறுவனத்தின் முதலாவது பகுப்பாய்வாளராக பிரித்தானியரான திரு கே.சி. பிறவுனின் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

இலங்கை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்ததாக காணப்பட்ட இந்த நிறுவனம் 1913 ஆம் ஆண்டு அரசாங்க திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டது. திணைக்களமொன்றாக வளர்ச்சியடைந்து வந்த இந்த நிறுவனம் 1934 ஆம் ஆண்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் காணப்பட்ட கட்டிடமொன்றில் மீளத்தாபிக்கப்பட்டது.

ஆரம்பம் முதல் வெளிநாட்டுத் தலைவர்களின் கீழ் காணப்பட்ட இத்திணைக்களத்தின் முதலாவது இலங்கையைச் சேர்ந்த பகுப்பாய்வாளராக திரு டபிள்யு.ஆர். சண்முகம் 1945 ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பணிகளை விஸ்தரித்து 1935 ஆம் ஆண்டு சந்தேகத்திற்கிடமான ஆவணங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 1940 ஆம் ஆண்டு முதலாவது சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் பற்றிய அரசாங்க பகுப்பாய்வாளராக திரு தம்பையா நாகேந்திரன் நியமனம் செய்யப்பட்டார்.

1960 ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பு அமைச்சின் கீழும், 1978 ஆம் ஆண்டு முதல் நீதி அமைச்சின் கீழும் இத்திணைக்களம் இயங்கிவந்துள்ளதுடன், இதன் முதலாவது பெண் பகுப்பாய்வாளராக திருமதி யோகராணி மகேசன் 1993 ஆம் ஆண்டு நியமனம் பெற்று வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

ஆய்வுகூடமொன்றுக்கு பொருத்தமற்ற கட்டிடமொன்றில் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் நூறு வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பழைய கட்டிடத்தில் காணப்பட்ட அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம், 2013 ஆம் ஆண்டு பத்தரமுல்ல, பெலவத்தயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 06 மாடிகளைக் கொண்ட புதிய ஆய்வுகூடங்கள் மற்றும் அலுவலகக் கட்டிடத் தொகுதியைக் கொண்ட புதிய கட்டிடத்தில் தாபிக்கப்பட்டது.

நவீன அம்சங்களைக் கொண்டதாக புதிய ஆய்வுகூடத்தை தாபித்தல் மற்றும் அதற்கு இசைவாக புதிய தொழில்நுட்ப முறையியல்களை அறிமுகம் செய்ய முடிந்தமை, குற்றவியல் நியாயத்தை நிறைவேற்றத் தேவையான விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வை வினைத்திறன்மிக்கவாறு நிறைவேற்றுவதற்கு பெரும் உதவியாக அமைந்தது.

மேலும், நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறைக்கு பபங்களிப்பு செய்யும் போது சட்ட விஞ்ஞானப் பிரிவுக்கு அத்தியாவசியமாக காணப்பட்ட னுயேு தொழில்நுட்பத்தை இந்த நாட்டில் தாபிப்பதற்கு இலங்கை அரசும் ருளயுஐனு கருத்திட்டமும் இணைந்து னுயேு ஆய்வுகூடமொன்று 2013 ஆம் ஆண்டு பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் புதிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (முழுஐஊயு) மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட கருத்திட்டத்தினால் 2016 ஆம் ஆண்டு திணைக்களத்தின் னுயேு ஆய்வுகூடத்தை மேம்படுத்துவதற்கும், இலங்கையில் முதற் தடவையாக கணினிக் குற்றவியல் விசாரணை ஆய்வுகூடமொன்றை பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் தாபித்தமையும், தணிக்களத்தினால் குற்றவியல் நியாயத்தை நிலைநாட்டுவதற்கு வழங்கும் விஞ்ஞானரீதியான சாட்சியங்களை மென்மேலும் விளைதிறன்மிக்கதாக்குதவற்கு கிடைத்த விசேடமான பங்களிப்புக்களாகக் குறிப்பிட முடியும்.

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகளின் உயர்மட்டத் தரத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டு பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் ஆய்வுகூடங்களுக்கு ஐளுழு 17025 சர்வதேச தரநியமங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. 1994 ஆம் ஆண்டு ஒரு அலுவலருடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திணைக்களத்தில் இன்று இலங்கை விஞ்ஞான சேவைக்கு உரித்தான அலுவலர்கள் 121 பேர் சேவையாற்றி வருவதுடன், 21 ஆவது பகுப்பாய்வாளராக திருமதி தீபிகா செனவிரத்ன அவர்கள் நியமனம் பெற்று கடமையாற்றி வருகின்றார். அத்துடன் 6 ஆவது சந்தேகத்துக்கிடமான ஆவணங்களை பரிசோதிப்பவராக திரு ஜே.எம். ஜயசுந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் திணைக்களம் சட்ட விஞ்ஞானம் மற்றும் உணவு விஞ்ஞானம் ஆகிய பிரதான இரண்டு துறைகளின் கீழ் இயங்கிவருவதுடன், பெருமைமிக்க சேவையொன்றை இலங்கையில் நேர்மையான மற்றும் சட்டத்தை மதிக்கின்ற சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக ஆற்றிவருகின்றது.

## 1.2 திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

**நோக்கு**

நியாயமான மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல

**செயற்பணி**

**நீதிமன்றம், சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களுக்கு சட்ட விஞ்ஞானத்துறை மற்றும் உணவு விஞ்ஞான துறைகள் தொடர்பில் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வு, நிபுணத்துவ மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்**

**நோக்கங்கள்**

**வினைத்திறன்மிக்க மற்றும் நியாயமான முறையில் நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்தல்**

## 1.3 பிரதான பணிகள்

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களமானது, சட்ட விஞ்ஞானப் பிரிவு மற்றும் உணவு விஞ்ஞானப் பிரிவு ஆகிய பிரதான இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், இது இலங்கையிலுள்ள ஒரே அரச தடயவியல் சட்ட ஆய்வுகூடமாகும். வெடிமருந்துகள், தீப்புலனாய்வு, எரிபடைத்துறை, போதைவஸ்து, நீர்ப்பாயவியல் மற்றும் னுயுே, நஞ்சியல், சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள், கணினி டிஜிட்டல் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் நானாவித வழக்குச் சான்றுப்பொருட்கள் பிரிவு ஆகிய பிரதான எட்டுப் பிரிவுகளைக் கொண்டதாக சட்ட விஞ்ஞாபனப் பிரிவு இயங்கிவருகின்றது.

இந்தத் திணைக்களம் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாகும் என்பதுடன், நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம், உள்;ராட்சி மன்றங்கள், சுகாதார திணைக்களம், துறைமுக அதிகாரசபை மற்றும் வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற வழக்குத் தடயப்பொருட்கள் மற்றும் வேறு மாதிரிகளை விஞ்ஞான ரீதியாக பரிசோதனை செய்து பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்கிவருகின்றது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரச திணைக்களங்கள் மற்றும் அரச அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற உணவு, மதுபானம், பால் மற்றும் நீர் சார்ந்த மாதிரிகளின் தன்மையை பரிசோதனை செய்து அறிக்கையிடுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் நீதிமன்றங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேகத்துக்கிடமான ஆவணங்களைப் பரிசோதித்து அறிக்கைகளை சமர்ப்பிப்பது சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பரிசோதனைகளுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற சகல வழக்குத் தடயப்பொருட்கள் அல்லது வேறு மாதிரிகள், உணவு மற்றும் மருந்துகள் சட்டம், தேசிய சுற்றாடல் சட்டம், மதுவரிகள் கட்டளைச் சட்டம், புகையிலை மற்றும் மதுபானம் பற்றிய தேசிய அதிகாரசபை சட்டம், ஒப்பனைப் பொருட்கள் அவுடதங்கள் மற்றும் சாதனங்கள் சட்டம், பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம், சுடுகலன் கட்டளைச் சட்டம், விசம், அபின் மற்றும் அபாயகர ஔடத சட்டம், வெடிபொருள் சட்டம், தீங்கு விளைவிக்கும் ஆயத சட்டம், மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, சான்றுகள் கட்டளைச்சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை வழங்குதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், நாட்டில் இடம்பெறுகின்ற கொலைகள், வன்புணர்ச்சி, துப்பாக்கிப் பிரயோகம், தீவிபத்து, பயங்கர வீதி விபத்துக்கள் போன்ற பயங்கரமான குற்றச் செயல்கள் சம்பந்தமான குற்றவியல் இடங்களை ஆய்வு செய்வதற்கு அலுவலர்களின் நிபுணத்துவ உதவியும் பொலிஸ் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பிரபுக்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கான உணவுகளைப் பரிசோதிப்பது நஞ்சியல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நீதிமன்றத்தில் நிபுணத்துவ சாட்சிகள் என்ற வகையில் அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பகுப்பாய்வு அறிக்கைகள் தொடர்பில் எமது திணைக்களத்திலுள்ள இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களிலும் நிபுணத்துவ சாட்சியங்களை வழங்குகின்றார்கள்.

இவ்வாறான சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றுள்ள அலுவலர்கள் அரச அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களுக்கு விஞ்ஞான ரீதியான ஆலோசனைகளை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக உணவுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் பல்வேறு தரநியமங்களின் வகைப்படுத்தல்களை தயார் செய்வதற்கும் மேற்படி அலுவலர்கள் பெரும் பங்களிப்பை வழங்கிவருகின்றார்கள். பாதுகாப்பு அமைச்சுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள், வெடிமருந்துகள் மற்றும் வேறு இரசாயன பதார்த்தங்களை கொள்வனவு செய்யும் போதும், வேறு நிறுவனங்களுக்கு உச்சதொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போதும் தொழில்நுட்பக் குழுக்களுக்கு நிபுணத்துவ உதவியைப் பெற்றுக் கொடுப்பதும் குறித்த அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், பொலிஸ் அலுவலர்கள், குற்றப் புலனாய்வு அலுவலர்கள், முப்படை அலுவலர்கள், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பயிலுனர் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற மருத்துவ அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அவர்களின் சட்ட விஞ்ஞான மற்றும் உணவு விஞ்ஞான அறிவை மேம்படுத்திக் கொள்ளவும் இத்திணைக்களத்திலுள்ள இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் விரிவுரைகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றார்கள்.

## 1.4 திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு



## 1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

### சட்ட விஞ்ஞானத்துறை (தடயவியல் விஞ்ஞானம்)

இப்பிரிவின் கீழ் பின்வரும் பகுப்பாய்வு ஆய்வுகூடங்கள் காணப்படுகின்றன.

1. துப்பாக்கி மற்றும் ஏவுகணை விஞ்ஞான ஆய்வுகூடம்

துப்பாக்கி மற்றும் சட்ட ஏவுகணை விஞ்ஞான பிரிவினால் பல்வேறு வகையிலான துப்பாக்கிகள் அதாவது ரைபல், பிஸ்ரல், தோட்டா, துப்பாக்கி, இடிக்கும் துப்பாக்கி மற்றும் தோட்டா வகைகளை வைத்திருக்கும் போது, இவை குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவற்றை பரிசோதித்து அறிக்கைகள் வழங்கப்படும். துப்பாக்கிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் நுண்ணிய ஒப்பீட்டு பரிசோதனைகளை மேற்கொண்டு விஞ்ஞான ரீதியாக பரிசோதனை செய்வதும் இதில் உள்ளடங்கும். இதற்காக குற்றச் செயல்களின் போது பயன்படுத்தப்படுகின்ற துப்பாக்கிகள், துப்பாக்கிகளின் பகுதிகள், பல்வேறு தோட்டா வகைகள், பயன்படுத்திய தோட்டா உறைகள் மற்றும் தோட்டாக்கள் போன்றன பரிசோதிக்கப்படும். மேலும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உட்பட்ட வாகனம், கட்டிடம் போன்றனவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், எவ்வாறான துப்பாக்கி குறித்த குற்றவியல் செயலுக்கு பயன்படுத்தப்பட்டது என்பது பற்றிய நிபுணத்துவ கருத்து வெளியிடப்படும்.

2. வெடிமருந்துகள் மற்றும் தீப் புலனாய்வு ஆய்வுகூடம்

இப்பிரிவினால் குண்டு வெடிப்பு, வெடிமருந்துகள் மற்றும் வெடிக்கச் செய்யும் உபாயமுறைகளை (குண்டு) யாராயினும் தம்வசம் வைத்திருப்பது உட்பட வெடிமருந்துகளை பயன்படுத்தி மேற்கொள்ளும் குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குச் சான்றுப்பொருட்கள் விஞ்ஞான ரீதியாக பரிசோதிக்கப்படும். தம்வசம் வைத்திருக்கும் போது கைப்பற்றப்படுகின்ற பல்வேறு வகையிலுமான வெடிப்பு உபாயமுறைகளை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) செயலிழக்கச் செய்த பின்னா், அவற்றின் பகுதிகளும் மேற்படி அலுவலா்களினால் பகுப்பாய்வு செய்யப்படும். மேலும், ஆதனங்கள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் போன்றன தீவிபத்துக்கு உட்படும் போது பொலிஸில் முறைப்பாடு செய்தல் மற்றும் காப்புறுதி நட்டஈட்டுக்காக சமா்ப்பிக்கப்படும் கோரிக்கைகளுக்கு அமைய மேற்படி தீவிபத்துக்கள் தொடா்பில் விசாரணை மேற்கொண்டு தீவிபத்துக்கான காரணம் தொடா்பிலான அபிப்பிராயங்களை சமா்ப்பிப்பதும் மேற்படி பிரிவைச் சோ்ந்த அலுவலா்களின் பணியில் உள்ளடங்கும்.

3. போதைவஸ்து மற்றும் உளக்கோளாறு நடத்தை பற்றிய ஆய்வுகூடம்

பொலிஸ், பொலிஸ் போதைவஸ்துப் பணியகம் அல்லது சுங்கத்தினால் கைப்பற்றப்படுகின்ற தடை செய்யப்பட்ட போதைவஸ்துக்கள் மற்றும் உளக்கோளாறுக்குக் காரணமாகின்ற ஹெரோயின், மோபரீன், அபின், கஞ்சா மற்றும் அவை சாா்ந்த உற்பத்திகள், கோகேன், மெத்எம்பிரமீன் மற்றும் அவை சாா்ந்த பல்வேறு போதை மருந்துகள் மற்றும் நேற ீஎலஉாழயஉவளைந ஞரடிளவயஉெநள (ளுே) வகையில் உள்ளடங்குகின்ற போதைமருந்துகளை இரசாயன ரீதியாக இனங்காணல் மற்றும் அவற்றில் உள்ளடங்கும் அம்சங்களின் கூறுகள் பற்றிய தூய்மைப் பகுப்பாய்வை மேற்கொண்டு நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே தேவையான சந்தா்ப்பங்களில் போதைப்பொருட்கள் தடுத்துவைக்கப்பட்ட இடங்கள், போதைபொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்ற இடங்கள் மற்றும் அவற்றைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் போன்றவற்றை பரிசோதிக்க பொலிஸாருக்குத் தேவையான நிபுணத்துவ உதவிகளும் வழங்கப்படுகின்றன.

4. நீதிமன்ற நீா்ப்பாயவியல் மற்றும் மரபணு (டீ.என்.ஏ.) ஆய்வுகூடம்

பல்வேறு கடும் குற்றச் செயல்கள் தொடா்பான சாட்சியங்களாக பெற்றுக் கொள்ளப்படும் உயிரியல்சாா் பதாா்த்தங்கள் மற்றும் உயிரியல் ரீதியாக தாய், தந்தை மற்றும் பிள்ளைகள் ஆகிய குறித்த தரப்பினா்களுக்கு இடையிலான தொடா்பைப் பெற்றுக் கொள்வதற்காக மனித உடலின் எலும்புத் துண்டுகள், பல் மற்றும் உடல் திரவங்கள் உட்பட எந்தவொரு உயிரியல்சாா் பதாா்த்தத்தின் அடிப்படையில் பரிசோதனைகளை நடாத்தி மரபணு (டி.என்.ஏ.) பரிசோதனையின் அடிப்படையில் அறிக்கைகளை வெளியிடுவது இப்பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

மேலும் சிக்கலான கொலைகள் மற்றும் குற்றச் செயல்கள் இடம்பெற்ற இடங்களில் காணப்படும் இரத்தகறைகள், முடி, இரத்தம் தெளித்துள்ள விதம் போன்ற உயிரியல்சார் பௌதீக சான்றுகளை பரிசோதித்து, பகுப்பாய்வு செய்து அறிக்கைகளை வெளியிடுவதும் இப்பிரிவின் கடமைகளில் உள்ளடங்கும்.

5. நீதிமன்ற நஞ்சியல் ஆய்வகூடம்

நீதிமன்ற நஞ்சியல் பிரிவைச் சேர்ந்த நிபுணர்களினால் சட்டமருத்துவப் பணிகள் மற்றும் குற்றவியல் செயல்களின் பரிசோதனைகளுக்கு நஞ்சு வகைகளை இனங்காண்பதற்கான பல பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீதிமன்ற மருத்துவ அலுவலர்கள் அல்லது நீதிமன்றத்தினால் பொறுப்பளிக்கப்படுகின்ற சந்தேகத்துக்கிடமான மற்றும் திடீர் மரணங்களுக்கு ஆளான ஆட்களின் மரண விசாரணைகளின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட உடல் பகுதிகள் மற்றும் மாதிரிகள், போதைவஸ்துக்கள் மற்றும் ஏனைய நஞ்சு வகைகளான சயனைட், பூச்சிகொல்லி வகைகள், அரிக்கும் அமில வகைகள் மற்றும் காபன்மோனோக்சையிட்டை போன்ற பாதகமான இரசாயனப் பதார்த்தகங்களை இனங்காண்பதற்கான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல், குடிபோதையில் வாகனம் ஓட்டிச் சென்றதாக சந்தேகிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் உயிரிழப்பு ஏற்பட்டுள்ள வாகன விபத்துக்களின் போது மதுபானம் அல்லது வேறு மருந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை இனங்காண்பதற்காக ஆட்களின் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல், குற்றவியல் செயல் இடம்பெற்றுள்ள இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட சட்ட விஞ்ஞான ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பௌதீக சான்றுகள் (மருத்து வில்லைகள், நஞ்சு போத்தல், எஞ்சியுள்ள உணவு போன்றன) போதைவஸ்துக்கள், நஞ்சு வகைகள் மற்றும் அமில வகைகளை இனங்காண்பதற்கான இரசாயன பகுப்பாய்வுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

6. சட்ட விஞ்ஞான ரீதியில் சந்தேகத்துக்கிடமான ஆவணங்களுக்கான ஆய்வுகூடம்

நீதிமன்ற மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்குத் தேவையான சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் இப்பிரிவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

சகல வகையான சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள், கையெழுத்து மற்றும் கையொப்பம் போன்றன இப்பிரிவினால் அவற்றின் உண்மைத்தன்மை பற்றி பரிசோதிக்கப்படும். மேலும் ஆவணங்களிலுள்ள மாற்றம் செய்யப்பட்டவை, அழித்தல், திரிபுபடுத்தல், புதிதாக சேர்த்தல் மற்றும் பதிலீடு செய்யப்பட்டவற்றை இனங்காணல், கடவுச்சீட்டு, வீசா, எழுதும் உபகரணம், மை, கடதாசி மற்றும் ஒட்டும் பொருட்கள், எரிந்த கருகிப்போன மற்றும் திரிபுபடுத்தப்பட்ட நாசப்படுத்தப்பட்ட ஆவணங்கள், போலி நாணயத்தாள்கள், லொத்தர்சீட்டுக்கள், வருமான முத்திரை, தபால் முத்திரை மற்றும் (அரச) வருமானத்துடன் சம்பந்தப்பட்ட வேறு ஆவணங்களை பரிசோதித்து அவற்றின் உண்மைத்தன்மை அல்லது உரிய வேறு அபிப்பிராயங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பது இப்பிரிவைச் சேர்ந்த நிபுணர்களான அலுவலர்களின் பொறுப்பாகும்.

7. கணினி மற்றும் டிஜிரல் குற்றச் செயல்களை பகுப்பாய்வு செய்யும் ஆய்வுகூடம்

அண்மைக்காலத்தில் தாபிக்கப்பட்டுள்ள டிஜிரல் குற்றச் செயல்களை பகுப்பாய்வு செய்யும் பிரிவு பிரதானமாக டிஜிரல் தரவுப் பகுப்பாய்வு, டிஜிரல் புகைப்படப் பகுப்பாய்வு, குரல் அடையாளம் மற்றும் ஒலிப் பகுப்பாய்வு மற்றும் உயிரியல் பண்புசார் பகுப்பாய்வு ஆகிய பிரதான 4 பிரிவுகளின் கீழ் பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

கணினி, கையடக்கத் தொலைபேசி, ஊஊவுஏ னுஏசு இயந்திரங்கள் போன்ற டிஜிரல் உபகரணங்களைில் உள்ளடங்கும் தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றில அழிக்கப்பட்டுள்ள தரவுகளை மீள்உருவாக்கம் செய்தல், ஊஊவுஏ வீடியோ தரவுகளை பகுப்பாய்வு செய்தல், உயிரியல் பண்புசார் அடிப்படையில் ஊஊவுஏ காட்சிகளில் தோற்றும் ஆட்களின் முகங்களை இனங்காணல், ஊஊவுஏ காட்சிகளில் காணப்படுகின்ற தெளிவற்ற வாகனப் பதிவு இலக்கத் தகடுகளை இனங்காணல், டிஜிரல் புகைப்படம் மற்றும் வீடியோ நாடாக்களை மேம்படுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இனங்காணல், குரல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள உரையாடல்களில் உள்ள குரல்களின் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தல் போன்ற பகுப்பாய்வுகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

8. நானாவித வழக்குச் சான்றுப்பொருட்களின் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

நானாவித வழக்குச் சான்றுப்பொருட்கள் பிரிவிலுள்ள சட்ட நீதிமன்ற நிபுணா்களினால் ஏனைய விடயங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்டு வகைப்படுத்தப்பட முடியாத வேறு வகையிலான பௌதீக சான்றுகள் பரிசோதிக்கப்படுகின்றன. சந்தேகத்துக்கிடமான வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் என்ஜின் இலக்கத்தை பரிசோதித்தல் மற்றும் அவை உண்மையானவையா, மோசடியானவையா என்பதை தீர்மானித்தல் மற்றும் பொருத்தப்பட்ட வாகனங்களை இனங்காண்பது இதற்கான உதாரணமாகும். மேலும் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு வகையிலுமான தொடுதல் பற்றிய சான்றுகள் மற்றும் பௌதீக சான்றுகள் உதாரணம் : கண்ணாடித் துண்டுகள், வா்ண பகுதிகள், நாா் வகைகள், மண், ஆயதம், ஆயத அடையாளங்கள் (விரல் அடையாளம் அல்லாத) இலட்சினைகள் போன்றவற்றுக்கு விஞ்ஞான ரீதியான பரிசோதனை மற்றும் பல்வேறு தொழில்நுட்ப இரசாயன உபகரணங்களை பயன்படுத்தி இரசாயனப் பகுப்பாய்வு முறைகளின் மூலம் இனங்காணல் மற்றும் ஒப்பீடு செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக வாகன விபத்துக்கள் தொடா்பாக வாகனங்கள் விபத்துக்குள்ளான இடங்கள் மற்றும் குறித்த ஏனைய தடயப்பொருட்களை விஞ்ஞான ரீதியாக பரிசோதித்து மேற்படி விபத்துக்களை மீள உருவாக்கி தேவையான முக்கிய சாட்சியங்களை கண்டுபிடிப்பது இப்பிரிவின் நிபுணா்களது பொறுப்பாகும்.

**<u>உணவு விஞ்ஞானப் பிரிவு</u>**

1. உணவுப் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

1980 இன் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் கீழ் சுகாதார திணைக்களத்தின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலா்களினால் (சுகாதார மருத்துவ அலுவலா்கள், உணவுப் பரிசோதகா்கள், பொது சுகாதார பரிசோதகா்கள் போன்றோா்) சமா்ப்பிக்கும் உணவு மாதிரிகள், பால் மற்றும் பால்சாா்ந்த உற்பத்திகளை, பகுப்பாய்வு செய்துஅறிக்கைகளை வெளியிடுதல், உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால், ஏனைய அரச நிறுவனங்களின் மூலம் மற்றும் தனியாா் நிறுவனங்களினால் அனுப்பிவைக்கப்படுகின்ற அவ்வாறான உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்து நிலைமை அறிக்கைகள் வெளியிடுதல் மற்றும் சுங்கத் திணைக்களம், பாவனையாளா் அலுவல்கள் அதிகாரசபை, இலங்கை தேயிலை சபை மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகம் போன்ற நிறுவனங்கள் சமா்ப்பிக்கின்ற மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கைகளை வெளியிடுதல், தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு குடிநீா் மற்றும் கைத்தொழில் கழிவு நீரைப் பகுப்பாய்வு செய்து நிலைமை அறிக்கைகளை வெளியிடுவதும் உணவு கட்டளையின் கீழ் போத்தலிலிடப்பட்ட நீரை இலங்கையின் நியமங்களுக்கு அமைய குடி நீா் தொடா்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கையினை வெளியிடுதலும் இப்பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன.

2. மதுபானப் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

நீதிமன்றத்தினால் பகுப்பாய்வுக்காக எமது திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும் சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளை பகுப்பாய்வு செய்து மதுவரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் மதுவரிகள் திணைக்களத்தினால் சமா்ப்பிக்கப்படுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களுக்கான நிலைமை அறிக்கைகளை வெளியிடுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## கணக்குகள் பிரிவு

திணைக்களத்தின் முக்கிய குறிக்கோளான வினைத்திறனுடனும், நியாயமாகவும் நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யத் தேவையான வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்கத் தேவையான நிதியை சேகரித்தல் மற்றும் அவற்றை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் வழிப்படுத்துவதன் மூலம் நிதி முகாமைத்துவம் செய்தல் மற்றும் அவை சம்பந்தமான கணக்கு நடவடிக்கைகளை பேணிவருவதும், நிதித் தகவல்களை அவசியப்படும் வேறு தரப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும் நிதிப் பிரிவின் பொறுப்புமாகும்.

மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது,

- வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க நிதி முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்தல்.
- நிதி ஆலோசனை மற்றும் வழிகாட்டல்
- நிறுவனத்திற்கு உரித்தான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்
- அரச நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நிதியைப் பயன்படுத்தல்.
- கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்ற

## தாபனப் பிரிவு

துறைக்குள் உகந்த பணியாளர்கள் மற்றும் சரியான மனிதவள மேலாண்மையை பராமரிப்பதன் மூலம் திறமையான மற்றும் நியாயமான நீதி நிர்வாகத்திற்கு தேவையான வசதிகளை இந்தப் பிரிவு வழங்குகிறது மற்றும் ஒருங்கிணைக்கிறது. இதன் கீழ்,

- பணியாளர் ஆட்சேர்ப்பு, பயிற்சி, திறன் மேம்பாடு, பதவி உயர்வு மற்றும் ஓய்வு ஆகியவற்றிற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது.
- நாடு தழுவிய சேவைகள் மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளின் அதிகாரிகளின் நிர்வாக நடவடிக்கைகளை துறை ஊழியர்களுக்குள், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகம், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் மாகாண விவகார அமைச்சகம் மற்றும் பொது சேவை ஆணையத்துடன் இணைந்து மேற்கொள்வது.
- துறையின் துறைகளுக்கு இடையே நல்லுறவைப் பேணுவதற்கும், அந்தத் துறைகளின் செயல்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்கும் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் பிற வளங்களை வழங்குதல்.
- தொடர்புடைய ஒப்பந்தங்களில் நுழைவதன் மூலம் நிறுவனத்தின் அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.
- நிறுவனத்தின் தினசரி பாதுகாப்பு மற்றும் துப்புரவு நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்வது.

1.6 வெளிநாட்டு நிதியைக் கொண்ட கருத்திட்டங்களின் விபரம்

| கருத்திட்டத்தின் பெயர் | கொடை வழங்கிய நாடு | கருத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை | கருத்திட்டக் காலப்பகுதி |
|---|---|---|---|
| • இலங்கையில் குற்றவியல் நியாயத்தை நிறைவேற்றும் கட்டமைப்பில் சட்டத்துறை மருத்துவ ஔடத பகுப்பாய்வின் கொள்ளளவை கட்டியெழுப்புவதை வலுவூட்டல் | கொரியா (கொய்கா கருத்திட்டம்) | அமெ.டொ.மி. 4.5 | 2022-2025 |
| • துருசுநு கருத்திட்டம் - ளுரீழசவ வழ துரளவளைந ளுநஉவழச ீசழதநஉவ | நுரசழிநயெ ருெைழெ (நுரு) துழளைவெ றவைா ருNனுீ | அமெ.டொ.மி. 1.4 | 2023 - 2025 |

# 02 அத்தியாயம்

## செயலாற்றுகை மற்றும் எதிர்கால சவால்கள்

## பகுப்பாய்வு அறிக்கைகளின் முன்னேற்றம்

ஒரு வருடத்தில் வெளியிடப்படும் பகுப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை, திணைக்களத்தின் ஆண்டு செயல்திறனை அளவிடுவதற்கான முக்கிய குறிகாட்டியாகும். 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வழக்குப் பொருட்களின் எண்ணிக்கை 58,886 ஆவதுடன், 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வழக்குப் பொருட்களின் எண்ணிக்கை 64,524 ஆக அதிகரித்துள்ளது. அதன்படி, இந்த வீதமானது 10% வரையிலான அதிகரிப்பாகும். மேலும், 2023 இல் வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 53,253. 2024 இல் வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 52,126 ஆவதுடன், இது 2023 உடன் ஒப்பிடும்போது 2% அளவிலான குவைடைதலாகும்.

| | 2023 | 2024 |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 58,886 | 64,524 |
| பதிவாகிய வழக்குப் பொருட்களின் எண்ணிக்கை | 53,253 | 52,126 |

**அந்தந்த துறைகளின் செயல்திறன்:-**

| பிரிவு | ஆய்வு கூடம் | 2024.01.01 ஆம் திகதியில் வழக்குகளின் எண்ணிக்கை | கிடைக்கப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | பதிவாகிய வழக்குப் பொருட்களின் எண்ணிக்கை | 2024.12.31 ஆம் திகதியில் பதிவாக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| நீதிமன்ற அறிவியல் துறை | போதைப்பொருள் மற்றும் மன நிலைக்கு ஊறுசெய்யும் பொருட்கள் | 9,754 | 35,044 | 27,127 | 17,671 |
| | சுடுபடைக்கலம் மற்றும் திட்டவியல் பிரிவு | 315 | 557 | 301 | 571 |
| | வெடிமருந்து மற்றும் தீப்பிடித்தல் பொருட்கள் பிரிவு | 125 | 608 | 381 | 352 |
| | நீதிமன்ற நஞ்சியல் பிரிவு (நச்சு வகைகள்) | 1,139 | 2,903 | 1,819 | 2,223 |
| | நீதிமன்ற நீர்ப்பாயவியல் பிரிவு | 3,221 | 2,172 | 1,393 | 4,000 |
| | சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் பிரிவு | 172 | 812 | 726 | 258 |
| | டிஜிரல் குற்றங்கள் பிரிவு | 1,157 | 1,143 | 833 | 1,467 |
| | பல்வகை நீதிமன்ற பொருட்கள் | 354 | 933 | 866 | 421 |
| மொத்தம் | | 16,237 | 44,172 | 33,446 | 26,963 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உணவியல் அறிவியல் துறை | மதுபானப் பொருட்கள் பிரிவு | 1,453 | 11599 | 9,824 | 3,228 |
| | மதுசாரம் மற்றும் புகையிலைப் பிரிவு | 92 | 3,210 | 3,302 | - |
| | உணவு சட்டத்தின் கீழ் உணவு மாதிரிப் பிரிவு | 30 | 4,016 | 4,024 | 22 |
| | பல்வேறு உணவு வகைகள் | 10 | 1,527 | 1,530 | 7 |
| மொத்தம் | | 1,585 | 20,352 | 18,680 | 3,257 |
| ஒட்டு மொத்தம் | | 17,822 | 64,524 | 52,126 | 30,220 |

ஒட்டு மொத்தமாக கவனத்தில் கொள்கையில் அதிகளவிலான வழக்குகள், போதைப்பொருட்கள் மற்றும் மன நிலைக்கு ஊறுசெய்யும் பிரிவிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதற்கு அமைவாக அதிகளவிலான அறிக்கைகளும் குறித்த பிரிவில் இருந்தே வழங்கப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வு அலுவல்களுக்கு மேலதிகமாக மேற்கொண்ட பணிகள்**

| பணி | எண்ணிக்கை |
|---|---|
| நீதிமன்றங்களில் சாட்சிகள் வழங்கிய சந்தர்ப்பங்கள் | 279 நாட்கள் |
| குற்றச்செயல்கள் இடம்பெற்ற இடங்களில் பங்கு பற்றிய சந்தர்ப்பங்கள் | 475 நாட்கள் |
| லீவு நாள் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர படி | 779 நாட்கள் மற்றும் 397.2மணித்தியாலங்கள் |
| நஞ்சியல் பிரிவில் அலுவலர்கள் பங்குபற்றிய, விசேட பிரபுக்களின் மற்றும் இராஜதந்திரிகளின் உணவு பரிசோதனைகள் | 23 அலுவலர் நாட்கள் |
| போதனைகள் நடாத்தல் | 33 நாட்கள் |
| உள்நாட்டு பயிற்சி | 526 அலுவலர் நாட்கள் |
| வெளிநாட்டு பயிற்சி | 188 அலுவலர் நாட்கள் |
| வெளிநாட்டு கருத்தரங்கு | 02 |
| பட்டப்பின் படிப்புக்கு வெளிநாடு சென்றுள்ள அலுவலர்கள் (ஐக்கிய இராச்சியம்) | 02 |
| பட்டப்பின் படிப்புக்கு வெளிநாடு சென்றுள்ள அலுவலர்கள் (கொரியா) | 08 |


Statistics for All Sections - (2020 to 2024 )
70,000
60,000
50,000
40,000
30,000
20,000
10,000
-
35,191
34,689
14,673
29,273
36,328
7,700
45,245
40,756
12,189
58,886
53,253
17,822
64,524
52,126
30,220
2020
2021
2022
2023
2024
Received
Reported
Backlog


Statistics for the Narcotic Section (2020 to 2024)
40,000
35,000
30,000
25,000
20,000
15,000
10,000
5,000
-
17,983
16,928
5,873
13,358
17,841
1,390
20,798
16,479
5,709
28,133
24,088
9,754
35,044
27,127
17,671
2020
2021
2022
2023
2024
Received
Reported
Backlog


Monthly Statistics for the All Sections - 2024
35,000
30,000
25,000
20,000
15,000
10,000
5,000
-
5,798
5,542
18,078
6,099
5,792
18,385
5,448
4,682
19,151
4,633
3,052
20,732
5,149
3,942
21,939
4,871
4,157
22,653
6,083
3,884
24,852
5,532
3,691
26,693
4,380
4,754
26,319
6,199
3,685
28,833
5,593
4,383
30,043
4,739
4,562
30,220
January
February
March
April
May
June
July
August
Septem…
October
November
December
Received
Reported
Backlog


Monthly Statistics for the Narcotic Section - 2024
20,000
18,000
16,000
14,000
12,000
10,000
8,000
6,000
4,000
2,000
-
4,028
3,545
10,237
3,176
3,585
9,828
2,763
2,636
9,955
2,787
1,765
10,977
2,827
2,111
11,693
2,682
2,297
12,078
3,330
1,552
13,856
3,058
1,408
15,506
2,352
2,345
15,513
3,052
1,469
17,096
2,677
1,840
17,933
2,312
2,574
17,671
January
February
March
April
May
June
July
August
September
October
November
December
Received
Reported
Backlog

1. **பகுப்பாய்வு முடிவுறுத்துவதற்கு இயலாதுபோன வழக்கு பொருட்களின் அளவு குறைவடைதல்**

பதிவிடலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வழக்குப் பொருட்கள் குறித்து அறிக்கைகளை தாமதமின்றி சமர்ப்பிப்பது மிகவும் முக்கியமாகும். இதற்காக, திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் இலங்கை அறிவியல் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல் அவசியமாகும். 2024.12.31 ஆம் திகதியில் 21 உதவி இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் பதவிகள் வெற்றிடமாகியிருந்ததுடன், ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பல பதவிகளில் 121வெற்றிடங்கள் காணப்படுவதுடன், அது திணைக்களத்தின் செயல்திறனை நேரடியாக பாதிக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் வழக்குப் பொருட்கள் கிடைக்கப்பெறுதல் 10% அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் அதிக வெற்றிடங்கள் காரணமாக பகுப்பாய்வுகளை முடிவுறுத்தி, அறிக்கைகளை சமர்ப்பித்தல் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஏறத்தாழ 02% ஆல் குறைந்துள்ளது.

நாளாந்தம் சமர்ப்பிக்கப்படும் வழக்கு பொருட்கள் போன்றே மேற்படி பகுப்பாய்வுகளை முடிவுறுத்துவதற்கு இயலாதுபோன வழக்கு தொடர்பான பணிகளை முடிவுறுத்துவதென்றால் அலுவலர்களை மேலதிகநேர கடமையில் ஈடுபடுத்த வேண்டும். வார நாட்களிலும் மேலதிகமாக சில மணிநேரம் பணியாற்ற வேண்டுமென்பதுடன், அரசாங்கத்தின் லீவு நாட்களிலும் சேவையில் ஈடுபடுத்தல் வேண்டும்.

2. **ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவு தாபித்தல்**

நவீன அறிவியல் முறைமைகள் தொடர்பான அறிவு, திணைக்களத்தின் பணிகளுக்கு மிக முக்கியமாகும். புதிய போதைப்பொருட்கள் மற்றும் இராசயனப் பொருட்கள் பயன்பாட்டிற்கு சேருதல் நாளாந்தம் நிகழ்வதுடன், திணைக்களத்து அலுவலர்கள் இந்த சூழ்நிலைகள் குறித்து போதுமான அளவு விழிப்புடன் இருத்தல் அவசியமாகும். இதற்காக, இலங்கை அறிவியல் அலுவலர்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி மற்றும் முதுகலை பட்டப்படிப்பு வாய்ப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்.

3. **நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகளை அகற்றுதல்**

நாட்டின் நடைமுறைப்படுகின்ற நீதித் துறை முறையில் ஏதேனும் வழக்கு பொருட்டு இறுதி முடிவு கிடைப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாக, விசாரணைகள் முடிவுறுத்தப்பட்ட வழக்குப் பொருட்களை அகற்றுவதிலும் தாமதம் ஏற்படுகின்றது. அதிக அளவு வழக்குப் பொருட்கள்

பெறப்படுவதால், அவற்றைச் சேமிக்க போதுமான களஞ்சிய வசதிகள் இல்லாமையும் ஒரு கடும் பிரச்சினையாகும். இதன் காரணமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட வழக்குப் பொருட்கள் திணைக்களத்து வளாகத்திலிருந்து காலோசிதமாக அகற்றுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பாக பொலிஸ் அலுவலர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு, வழக்குப் பொருட்களை அகற்றுவதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தற்போது, நீதிமன்ற உத்தரவுகளின்படி பொலிஸ் அலுவலர்கள் வழக்குப் பொருட்களை அகற்றி வருகின்றனர். 2024 ஆம் ஆண்டில் மட்டும், போதைப்பொருள் மற்றும் மன நிலைக்கு பொருட்கள் பிரிவுக்குரியதாக 15,000 ம் வழக்குப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

பகுப்பாய்வு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான ஏராளமான ஆவணங்கள் குவிந்துள்ளன, மேலும் தற்போது உள்ள இடம் அந்த ஆவணங்களைச் சேமிக்க போதுமானதாக இல்லை. நீதிமன்றங்களில் முடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய தகவல்களை ஆய்வாளர் துறையிலிருந்து பெற முடிந்தால், குவிந்துள்ள அதிக எண்ணிக்கையிலான தேவையற்ற ஆவணங்களை துறையிலிருந்து அகற்றி, புதிய ஆவணங்களைச் சேமிக்க இடத்தைப் பயன்படுத்தலாம்.

### 4. வீடியோ தொழில்நுட்பம் ஊடாக நிபுணத்துவ சாட்சிகள் வழங்குதல்.

தீவு முழுவதும் அமைந்துள்ள நீதிமன்றங்களில் சாட்சி வழங்கும்போது, அலுவலர்களை பங்குபற்றச் செய்விக்கையில் ஏற்படும் சிக்கல்களைக் குறைப்பதற்காக, நிகழ்நிலை வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் விரைவாக சாட்சிகள் வழங்கும் ஒரு அமைப்பை நிறுவுவது மிகவும் முக்கியமாகும். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக, நீதி அமைச்சு மற்றும் UNDP திட்டத்தால் எமது திணைக்களத்திடம் இரண்டு தொகுதி வீடியோ தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கியதுடன், மேலும் அவை தற்போதும் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ளன.





இந்த முறையின் கீழ், திணைக்களத்தின் இலங்கை அறிவியல் சேவையின் அலுவலர்கள், நாடு முழுவதும் வியாபித்துள்ள பல்வேறு நீதிமன்றங்களுக்கு தங்கள் நிபுணத்துவ ஆதாரங்களை வழங்க முடிந்தால், பௌதீக ரீதியாக பங்குபற்றுவதற்கு செலவிடும் நேரத்தை அதிக அளவில் வெகுவாகக் குறைத்துக் கொள்ளலாம். இதனால் அவர்கள் தங்கள் நேரத்தை உத்தியோகபூர்வ கடமைகளுக்கு மிகவும் திறம்பட பயன்படுத்த முடியும். மேலும் அரசாங்க செலவுகளை ஒப்பீட்டளவில் குறைத்துக் கொள்வதற்கும் முடிகின்றது.

### 5. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் வழக்கு பொருட்கள் கிடைக்கப்பெறுதல்களை முகாமை செய்வதற்கு முடியுமான வகையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தலானது, விளைவுத்திறனை மேம்படுத்தப்படும். ICTA நிறுவனம் மூலம் இரண்டு கட்டங்களிலான கருத்திட்டமாக இந்த தொழில்பாட்டு மென்பொருட்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், 2024 ஆம் ஆண்டில் இந்த திட்டம் முன்னோடி நிலை மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

### 6. ஆய்வுகூடங்களில் பகுப்பாய்வு அலுவல்களை முகாமைத்துவம் செய்வதற்காக கணினி மென் பொருட்களை தாபித்தல்

சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் ஆய்வகத் தகவல்களை திறம்பட கையாளுவதற்கு ஒரு முறையொன்றை தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### 7. உட்கட்டமைப்பு வசதிகள்

UNDP நிறுவனத்துடன் Support To Justice Sector Project (JURE) என்ற பெயரில் நீதிமன்ற, சிறச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சின் பூரண இணக்கத்துடன் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த திட்டம் 2025 ஆம் ஆண்டு வரை செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், குறித்த திட்டத்தின் முதல் கட்டமாக திணைக்களத்தில் குவிந்துள்ள அதிக அளவிலான வழக்குப் பொருட்களை பகுப்பாய்வு செய்து முடிவுறுத்தும் நோக்கத்துடன் 15 அறிவியல் துறை தொடர்பான அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டது. அதன்படி, குறித்த 15 அலுவலர்களுக்கிடையில் 6 அலுவலர்கள்

போதைப்பொருள் மற்றும் மன நிலைக்கு ஊறுசெய்யும் பொருட்கள் தொடர்பான ஆய்வகத்திற்கும், 4 அலுவலர்கள் நீதிமன்ற நீர்ப்பாயவியல் மற்றும் டீஎன்ஏ தடயவியல் ஆய்வகத்திற்கும், 3 அலுவலர்கள் நீதிமன்ற நஞ்சியல் ஆய்வகத்திற்கும், 02 அலுவலர்கள் கணினி மற்றும் டிஜிட்டல் குற்றப் பகுப்பாய்வு ஆய்வகத்திற்கும் இணைக்கப்பட்டனர். குறித்த அலுவலர்களை இணைக்கப்பட்டதன் பின்னர், 2024 ஆம் ஆண்டில், நீதிமன்ற நஞ்சியல் பிரிவின் ஆய்வுகூடத்தில் குறித்த அலுவலர்கள் மூலம் 104 வழக்கு பொருட்களை பகுப்பாய்வு செய்துள்ளதுடன், மேலும் போதைப்பொருள் மற்றும் மன நிலைக்கு ஊறு விளைவிக்கும் ஆய்வகூடத்தில் ஏறத்தாழ 3480 வழக்குப் பொருட்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மேலும், நீதிமன்ற நீர்ப்பாயவியல் பிரிவு மற்றும் டீஎன்ஏ ஆய்வகம் 627 வழக்குப் பொருட்களை பகுப்பாய்வு செய்வதற்கு, இலங்கை அறிவியல் சேவையின் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. மேலும், கணினி மற்றும் டிஜிட்டல் குற்றப் பகுப்பாய்வு ஆய்வகத்தில் 87 வழக்குப் பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

2024 ஆம் ஆண்டில், JURE திட்டம் மூலம் வெளிநாட்டு மானியங்களின் கீழ் 15,309,961.44 மதிப்புள்ள நிதி பங்களிப்பு கிடைக்கப்பெற்றது. அதன் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அறிவியல் அலுவலர்களின் சம்பளம் மற்றும் ஆய்வகங்களுக்கான மென்பொருளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அங்கீகார நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் மீண்டுவரும் இயல்பிலான செலவினங்கள் பொருட்டு நிதிசார் பங்களிப்பு வழங்காதிருப்பதற்கான தீர்மானம் மீது, இதன் கீழ் ஒத்துழைப்பை இடைநிறுவதற்கு UNDP ஆல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்றவியல் நீதித்துறையில் தடயவியல் பகுப்பாய்வை நடத்துவதற்கான திறனை வலுப்படுத்தும் நோக்கத்துடன், KOICA திட்டத்தின் கீழ் 2023-2025 காலப்பகுதிக்காக 4.5 டொலர் மில்லியன் மதிப்புள்ள வெளிநாட்டு மானியத்தின் கீழ் திணைக்களத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இதன் கீழ், போதைப்பொருள் ஆய்வகம் மற்றும் நஞ்ஞியல் அறிவியல் ஆய்வகத்திற்கு ரூபா.50,545,868.00 மதிப்பிலான

ஆய்வகப் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ரூபா.329,226,889.00 மதிப்புள்ள ஆய்வக உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

மேலும் ரூபா. 85,768,242.00 மதிப்புள்ள ஆய்வக தளபாடங்கள், கணினிகள் மற்றும் ஒரு SEVER அமைப்பு சேர்க்கப்பட்டன. மேலும் ரூபா. 68,684,474.00 மதிப்புள்ள இரசாயனப் பொருட்கள், இராசயன தரநிலைகள் மற்றும் நுகர்பொருட்களும் இதில் அடங்கும். அதன்படி, இந்தத் திட்டம் தொடர்பாக திணைக்களத்திடம் கிடைக்கப்பெற்ற பல ஆய்வக உபகரணங்களின் புகைப்படங்கள் மற்றும் சுருக்கமான விளக்கங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

## 2024 ஆண்டில் அளிப்புகளாக கிடைக்கப்பெற்ற உபகரணங்கள்

KOICA கருத்திட்டம் மூலம் நீதிமன்ற நஞ்சியல் ஆய்வுகூடம் விரிவாக்குதல், புதிய கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஆய்வுகூடம் விரிவாக்குவதன் கீழ் தேவையான மனிசாரம் வழங்குதல், உபகரணங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான எரிவாயு குழாய் முறைமை, ஆய்வுகூட மேசைகள் மற்றும் கதிரைகள் என்பன வழங்கப்பட்டன.









**Solid Phase Micro Extraction – Gas Chromatography Mass Spectrometer (SPME –GC/MS)**

KOICA கருத்திட்டத்தின் கீழ் நீதிமன்ற நஞ்சியல் ஆய்வுகூடத்தில் பகுப்பாய்வு பணிகளை இலகுபடுத்துவதற்கு தேவையான நவீன Fiber தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் Solid Phase Micro Extraction (SPME) Gas chromatography Mass Spectrometer (GC/MS) இயந்திரம் வழங்கப்பட்டது. இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தி இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளில் சிறிய மூலக்கூறு நிறைகளைக் கொண்ட போதைப்பொருட்கள் (எ.கா. ஐஸ், methamphetamine, MDMA, Ketamine) கண்டறிவதற்காக பயன்படுத்தப்படுகிறது. மேலும் SPMEதொழில்நுட்பத்திற்கு மேலதிகமாக இந்த உபகரணங்களை பயன்படுத்தி திரவ மற்றும் வாயு வடிவங்களில் மாதிரிகளில் உள்ள நச்சுகள் மற்றும் மருந்து வகைகளை பகுப்பாய்வு செய்வதற்கு பயன்படுதப்படுகிறது.



**Automated Solid Phase Extractor – (SPE)**

KOICA கருத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற Solid Phase Extractor உபகரணம் மூலம் தானியங்கி இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள மருந்துகள் மற்றும் நஞ்சு வகைகளை பரிசோதனை செய்கையில் அவற்றை அதிதொழில்நுட்ப உபகரணங்களில் உள்ளிடுவதற்கு முன்னர் மாதிரிகளை தயாரிக்கும் செயற்பாட்டில் தானியங்கி பிரித்தெடுத்தலுக்காக (Automated extraction) பயன்படுத்தப்படுகிறது. இந்த உபகரணங்கள் இயக்குவதால், மனித உழைப்பு குறைவடைந்து, அதிகளவிலான மாதிரிகளை ஒரே முறையில் தயாரித்துக்கொள்ளலாம்..



## Nitrogen Evaporator

நைட்ரஜன் ஆவியாக்கி உபகரணங்கள் KOICA திட்டத்தின் கீழ் பெறப்பட்டதுடன், gas chromatography மற்றும் liquid chromatography முறைகளைப் பயன்படுத்தி மாதிரி பகுப்பாய்வு செய்யும்போது குறித்த மாதிரிகளின் செறிவை அதிகரிப்பதற்கும், மாதிரிகளை உலர்த்தவும் Nitrogen Evaporator உபகரணம் பயன்படுத்தப்படுகிறது. இதன்போது நைட்ரஜன் வாயுவின் செறிகால் பொறியை மாதிரி ஊடாக அனுப்புவதன் மூலம், செறிவுகள் அதிகமான மாதிரிகள் கிடைக்கப்பெறுகின்றது. உயிரியல் மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதில் இந்த முறை மிகவும் உதவியாக அமையும்.



## Headspace – Gas Chromatography

மேலும், இந்த திட்டத்தின் கீழ் Headspace – Gas Chromatography உபகரணம் மூலம் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளில் உள்ள ஆல்கஹால்களை (எ.கா. எத்தனால், மெத்தனால்) அளவு ரீதியாக அடையாளம் காணலாம்.



## Cobas Chemistry Analyzer

KOICA திட்டத்தின் கீழ் நீதிமன்ற நஞ்சியல் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற மற்றொரு உபகரணமாகும். இந்த உபகரணம் பயன்படுத்தி சிறுநீர் மாதிரிகளில் போதைப்பொருட்கள் உள்ளதா? இல்லையா என்பதை கண்டறிவதற்கு அடிப்படை சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
|  | **Biosafety Cabinet**<br><br>நீதிமன்ற நஞ்சியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்வுக்காக அனுப்பப்படும் மாதிரிகளின் உயிரியல் ஆபத்துகளிலிருந்து (Bio Hazard) பதவியணி பாதுகாக்கவும், பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் KOICA திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மற்றொரு கருவியாகும். |

| | |
|---|---|
|   | **Freezer and Refrigerator**<br>KOICA திட்டத்தின் கீழ், நீதிமன்ற நஞ்சியல் ஆய்வகத்தின் பகுப்பாய்வுப் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் அத்தியாவசிய இரசாயனப் பொருட்கள் மற்றும் மாதிரிகள் குறிப்பிட்ட வெப்பநிலை நிலைகளின் கீழ் (-20 oC மற்றும் 4 oC) சேமிக்கப்படுவதற்காக பயன்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் மூன்று உறைவிப்பான்கள் மற்றும் நான்கு குளிர்சாதனப் பெட்டிகள் பெறப்பட்டன. |

**<u>மேம்படுத்திய ஆய்வுகூடம்.</u>**








தற்போது போதைப்பொருள் பிரிவுக்கு தற்போது ஒதுக்கப்பட்ட இடம் போதுமானதாக இல்லாததால், KOICA திட்டத்தின் பாரிய உதவியுடன், முன்னர் நூலக வளாகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதியில், மேலதிக ஆய்வுகூடம் (Instrument Laboratory)

நிறுவப்பட்டது. ரூபா. 42,836,328.48 செலவில் நிருமாணிக்கப்படுவதுடன், நவீன ஆய்வுகூட வசதிகளைக் கொண்டுள்ளது.



**Liquid Chromatography – Tandem Mass Spectrometry (LC – MS/MS**

இந்த உபகரணம் சட்ட விரோதமாக மன நிலைக்கு ஊறு விளைவிக்கும் மற்றும் நஞ்சு பொருட்களை அடையாளம் காணுவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் பயன்பத்தும் துல்லியமான, நவீன, மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைமையாகும். New Psychoactive Substances (NPS) பகுப்பாய்வுக்காக விசேடமாக பயன்படுத்தப்படும். LC – MS/MS உபகரணத்துடன், 4 அலுவலர்களுக்கு அதன்தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுதொடர்பாக விசேட பயிற்சியும் வழங்கப்பட்டது.



UV-Vis Spectrophotometer

இந்த உபகரணமானது, , United Nations Office on Drugs & Crime (UNODC) மூலம் போதைப்பொருள் துறையில் பகுப்பாய்வு திறனை மேம்படுத்துவதற்காக நன்கொடையாக வழங்கப்பட்டதாகும். இந்த கருவி போதைப்பொருள் மற்றும் மனோவியல் பொருட்களின் தரமான மற்றும் அளவு பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**<u>2024 வருடாந்தம் திணைக்களத்திற்கு பரிசீலனைக்காக கிடைத்த வழக்குப் பொருட்களில் விசேட சித்தீன்.</u>**

**<u>உணவுப் பிரிவு</u>**

கடந்த ஆண்டு உணவு ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் போது, நாட்டிற்கு நன்கொடையாகப் பெறப்பட்ட அரிசி மற்றும் பருப்பு மாதிரிகள், மனித நுகர்வுக்கு ஏற்றவையா என்பதைச் பரிசோதனை செய்வதற்காக, 715 அரிசி மாதிரிகள் மற்றும் 337 பருப்பு மாதிரிகள் ஒரு மாத காலப்பகுதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**<u>போதைப்பொருள் பிரிவு</u>**

2024 ஆம் ஆண்டில், போதைப்பொருள் பிரிவுக்கு 35,044 வழக்குப்பொருட்கள் கிடைக்கப்பெற்றதுடன், அது இதுவரை போதைப்பொருள் பிரிவிடம் கிடைக்கப்பெற்ற மிக அதிகமான வழக்குப் பொருட்களாகும். இதற்கிடையில், 100-400 கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் மற்றும் மெத்எம்ஃபிட்டமீன் என்பனவற்றுக்கு ஏற்புடையதாக 06 வழக்குப் பொருட்கள் போதைப்பொருள் பிரிவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மாலம்பே பகுதியில் உள்ள ஒரு வீட்டில் திடீரென ஆட்கள் இறந்தது தொடர்பான விசாரணையின் போது, அந்த இடத்தில் சட்டவிரோதமாக மெத்எம்ஃபிட்டமீன் தயாரிக்கப்பட்ட இடம் என்பதை அரசு பகுப்பாய்வாளரின் பகுப்பாய்வு ஊடாக உறுதிப்படுத்தியது.

மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் தாவடி பகுதியில், சட்டவிரோதமாக போதைப்பொருள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை ஆய்வு செய்து அந்த இடத்தில் சட்டவிரோதமாக மெத்எம்ஃபிட்டமீன் தயாரிப்பதாக உறுதி செய்யப்பட்டது.
இறக்குமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட, சந்தேகத்திற்கிடமான உணவுப் பொருட்கள் போதைப்பொருள் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், மேலும் பகுப்பாய்வு மூலம் கஞ்சா செடியின் பாகங்கள் அந்த உணவுகளில் (Hemp flour mixed pasta ) கலக்கப்பட்டிருப்பதும் (Hemp mixed candy) கஞ்சா செடியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருப்பதும் பகுப்பாய்வுகளால் (Hemp Oil) அடையாளம் காணப்பட்டது. இவ்வாறு, 2024 ஆம் ஆண்டில் மருந்து ஆய்வகத்தில் முதன்முறையாக கஞ்சா செடியின் பாகங்களைக் கொண்ட உணவுப் பொருட்கள் அடையாளம் காணப்பட்டன.

அதேபோன்று பகுப்பாய்வு முடிவுறுத்தப்பட்டு வழக்குப்பொருட்கள் , புத்தளம் பிரதேசத்தில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட எரியூட்டியைப் பயன்படுத்தி அழிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், போதைப்பொருள் பிரிவின் அலுவலர்களால் நிபுணத்துவ உதவி வழங்கப்பட்டது.

சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் பிரிவு

2024 ஆம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான ஆவணப் பிரிவால் பகுப்பாய்வுக்காகப் பெறப்பட்ட 2,000 இற்கும் அண்மித்த வழக்குக் பொருட்களில், நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய பல நிகழ்வுகளும் காணப்பட்டன.

1. 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாளில் சில கேள்விகளை வெளியிடுவதில் ஈடுபட்ட நபர்களின் கையெழுத்துப் பரிசோதனை
2. மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் தற்போது விசாரிக்கப்படும் இம்யூனோகுளோபுலின் வழக்குக்காக, (immunoglobulin case) இந்தக் குற்றத்துடன் தொடர்புடைய ஆவணங்களில் சுகாதார அமைச்சின் அலுவலர்களின் கையொப்பங்கள் மற்றும் கையெழுத்துக்களின் அடையாளத்தைச் உறுதிப்படுத்தல்
3. இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட பிரமிடு திட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ள ONMAXDT திட்டத்தில் ஈடுபட்டுள்ள நபர்களின் கையெழுத்துகளை பரிசோதனை செய்தல்
4. துபாயில் மறைந்திருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை இந்த நாட்டிற்கு கொண்டு வருவதற்கு தேவையான நபர்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகளை நடாத்துதல்.
5. நுகர்வுக்கு தகுதியற்றதாக இருந்ததால் அழிக்க உத்தரவிடப்பட்ட ஃபார்ம் எண்ணையை அழிக்கப்படாது நுகர்வுக்கு பயன்படுத்தல் தொடர்பிலான ஊழலுக்கான கையெழுத்துகள் மற்றும் கையொப்பங்கள் பரிசோதனைகளை செய்தல்

**நீதிமன்ற நஞ்சியல் பிரிவு மற்றும் டீ. என்.ஏ ஆய்வுகூடம்**

1. சிலாபம் பகுதியில் நடந்த கூட்டு மர்மமான படுகொலை தொடர்பான விசாரணையின் போது, இறந்தவரின் அடையாளங்களைக் கண்டறியவும், சம்பவத்தில் வெளியாட்கள் ஈடுபட்டனரா என்பதைக் கண்டறியவும் சம்பவ இடத்திலேயே விசாரணை நடாத்தப்பட்டு, டிஎன்ஏ (DNA) பகுப்பாய்விற்காக மாதிரிகள் எடுக்கப்பட்டன.
2. நீர்கொழும்பு பகுதியில் நடந்த பல மோசடி மற்றும் ஊழல் வழக்குகளில் தொடர்புடைய நபர் ஒருவர், தனது அடையாளத்தை மறைப்பதற்காக தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு கடவுச்சீட்டு மூலம் ரகசியமாக துபாய்க்கு சென்றுள்ளதுடன், அதன்போது அங்கு நடந்த ஒரு சம்பவத்தில் மரணமடைந்துள்ளார். இறந்தவரின் மனைவி அவர் செய்த மோசடி மற்றும் ஊழலுக்கு பதிலளிக்க வேண்டிய சூழலில், அவரது சந்தேகத்திற்குரிய உடல் பாகங்கள் இந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதிமன்ற உத்தரவின்படி, டிஎன்ஏ பரிசோதனை மூலம் ஆள் அடையாளத்தை

உறுதிப்படுத்துவதற்காக அந்த உடற் பகுதிகள் மற்றும் அவரது மகள், தாய், மனைவி ஆகியோரின் உயிரியல் மாதிரிகள் அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் டிஎன்ஏ பிரிவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

டிஎன்ஏ பகுப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின்படி, துபாய் அரசாங்கத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட உடல் உறுப்புகள் தொடர்பில், நபர் ஒரு ஆண் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர் தொடர்பில் மேலும் இந்த வழக்கில் எங்களிடம் அனுப்பி வைக்கப்பட்ட மகளின் உயிரியல் தந்தை என்றும், அந்த தாயின் உயிரியல் மகன் என்றும் உறுதி செய்யப்பட்டது.

3. மாத்தறை மருத்துவமனையில் பிறந்த குழந்தை ஒன்று பிறக்கும்போதே இறந்துள்ளதுடன், இறந்த குழந்தையை தாயிடமோ அல்லது உறவினர்களிடமோ காட்டாமல் அடக்கம் செய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்போது இறந்த குழந்தையை காட்டாமல் அடக்கம் செய்தது தொடர்பாக தாய் மற்றும் சம்பந்தப்பட்ட உறவினர்கள் அளித்த புகாரைத் தொடர்ந்து, விசாரணை நடாத்தப்பட்டு, கழிவுகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட லாரியில் இறந்த குழந்தையின் உடல் என சந்தேகிக்கப்படும் ஒரு உடல் கண்டெடுக்கப்பட்டது. அதனை நீதிமன்ற உத்தரவின் மூலம் உடலின் அடையாளம் உறுதி செய்வதற்காக அரசாங்கத்தின் பகுப்பாய்வு திணைக்களத்தின் டீஎன்ஏ பிரிவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இங்கு இறந்த குழந்தையின் என சந்தேகிக்கப்படும் புகார்தாரர் தரப்பினரின் தாய் மற்றும் தந்தையின் உயிரியல் மாதிரிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், டிஎன்ஏ பகுப்பாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் படி, குப்பை அகற்றும் லாரியில் கண்டெடுக்கப்பட்ட குழந்தையின் உடல் புகார்தாரர் தரப்பினரின் தாய் மற்றும் தந்தையின் உயிரியல் குழந்தை என்பது தெரியவந்தது.

4. மெதிரிகிரிய பொலிஸ் பிரிவில் ஒரு கெப் வண்டியில் தீ வைத்து எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், இறந்த நபரின் உடல் பாகங்கள் டிஎன்ஏ பகுப்பாய்விற்காக அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப்பு வைக்கப்பட்டுள்ளன. இதன்போது இறந்த நபர் காணாமல் போனது தொடர்பான விசாரணையில், இறந்தவரின் குழந்தைகள் மற்றும் அவரது மனைவி என சந்தேகிக்கப்படும் டிஎன்ஏ மாதிரிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய டிஎன்ஏ விசாரணையில் தெரியவந்த உண்மைகளின்படி, அந்த கெப் வண்டியில் கண்டெடுக்கப்பட்ட எரிந்த உடல் பாகங்கள், வழங்கப்பட்ட குழந்தைகளின் மாதிரிகளின் படி உயிரியல் தந்தையுடையது என்பது உறுதி செய்யப்பட்டது.

**<u>நஞ்சியல் பிரிவு</u>**

01. மாலம்பே பிரதேசத்தில் சட்டவிரோதமாக நடாத்தப்பட்ட போதைப்பொருள் உற்பத்தி நிலையத்தில் இரசாயன கசிவு காரணமாக இரண்டு பேர் இறந்த சம்பவத்தை நேரில் ஆய்வு செய்தல், காற்று மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களின் உயிரியல் மாதிரிகளை(Biological Samples) ஆய்வு செய்தல் மற்றும் அவற்றில் உள்ள போதைப்பொருட்ளை அடையாளம் காணுதல்.

02. மீன்பிடி படகில் இருந்த ஐந்து மீனவர்கள் கடலில் மிதந்து கொண்டிருந்த ஒரு போத்தலில் இருந்த திரவத்தைக் குடித்தமையால், அவர்களில் நான்கு பேர் இறந்துள்ளனர். ஒருவர் உயிர் பிழைத்துள்ளார் சம்பவத்தில் ஈடுபட்ட மீனவர்களிடமிருந்து பெறப்பட்ட உயிர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**<u>வெடிமருந்து மற்றும் தீப்பிடித்தல் பொருட்கள் பிரிவு</u>**

1. மைல்போஸ்ட்11, கரந்தகொல்ல, எல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்து மற்றும் வீட்டின் உரிமையாளர் தீ விபத்தில் இறந்தது குறித்து 2024.03.11 அன்று விசாரணை நடாத்தப்பட்டது. இந்த வீட்டில் ஏற்பட்ட தீ, வேண்டுமென்றே பெட்ரோல் பயன்படுத்தி தீ வைத்ததன் மூலம் தொடங்கியது என்பது உறுதி செய்யப்பட்டது.
2. இலங்கை அறக்கட்டளை மாவத்தை, இலக்கம் 100, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள ஆக்ரா உணவகத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து 2024.06.30 அன்று விசாரணை நடாத்தப்பட்டதுடன், அதன்போது, அந்த தீ உணவகத்தின் சமயலறையில் உணவு சமைக்கும் போது அங்கு இருந்த எரிவாயு சிலிண்டரின் ரெகுலேட்டருடன் இணைக்கப்பட்ட இறப்பர் குழாய் ரெகுலேட்டருடன் சரியாக இணைக்கப்படாதபோது அல்லது ரெகுலேட்டருக்கு அருகிலுள்ள பகுதியில் இறப்பர் குழாய் சேதமடைந்தபோது, திரவ பெட்ரோலிய வாயு கசிந்து அடுப்பின் சுடரால் எரிவாயு பற்றவைக்கப்பட்டது தீ விபத்துக்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.
